திரு. எஸ். திருநாவுக்கரசு : இதனால் எத்தனைபேர் இறந் திருக்கிறார்கள் என்ற செய்தி பெறப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து ஒன்றைக் கவனிக்க வேண்டும். இப்படி விவரம் கேட்டால், 'தனிக் கேள்வி போடுங்கள்' என்றுதான் சொல்ல வேண்டி வரும். இப்படி நேருக்கு நேர் கேள்வி கேட்டு, உடனுக்குடன் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடை சொல்வது என்பது சாத்தியமில்லை. தாங்கள் நிலைமையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக் கிறீர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதற்கு விரைவில் நடவடிக்கை மேற்கொள்வதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, இறந்ததாகத் தகவல் ஏதும் வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) குத்தகை பாக்கிக்காக விவசாயிகள் நிலத்திலிருந்து வெளி யேற்றப்படும் நிலை.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, தங்கள் மூலமாக அரசாங்கத்திடமிருந்து ஒரு விவரத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே இருந்த அரசு, 4 லட்சத்திற்கும் மேற்பட்ட குத்தகை விவசாயிகளின் பிரச் சினைக்குத் தீர்வு காணாமல் ஒத்திப்போட்டு, ஒத்திபோட்டு வந்த தன் காரணமாக, தற்போது 50,000-க்கும் மேற்பட்ட குத்தகை விவசாயிகளின் மீதான வழக்குகள் ரெவின்யூ கோர்ட்டில் இருந்து வருகின்றன. ஆனால் என்ன காரணத்தாலோ இப்போது திடீ ரென்று குத்தகை விவசாயிகளை நிலத்திலிருந்து எவிக்ஷன் என் கின்ற முறையில் வெளியேற்றுகிறார்கள். அப்படி வெளியேற்று வதன் மூலமாக ஒரு தவறான எண்ணத்தை இந்த அரசின்மீது உண்டாக்க முயற்சிக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. எனவே, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே விவசாயி களின் இந்தப் பிரச்சினையைத் தீர்த்தால் அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். குத்தகை பாக்கியை எப்படித் தீர்ப்பது என் பதைப் பின்னால் பார்த்துக் கொண்டாலும், நிலத்திலிருந்து அவர்களைத் தற்போது வெளியேற்றுவதை உடனடியாகத் தடை செய்து அரசு அறிவிக்க முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

1989 பிப்ரவரி 20]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. விரையன் அவர்களும் மற்றும் சில உறுப்பினர்களும் எழுப்பிய இந்தப் பிரச்சினை மீது அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. நல்லதொரு முடிவு எடுக்கப் பட்டிருக்கிறது. குத்தகை கட்டுவதைப் பற்றிப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்றாலும் கூட இந்த வழக்குகள் சம்பந்தப்பட்ட வரைக்கும் அவைகளை மேற்கொண்டு தொடராமல் குத்தகை விவசாயிகளுக்குப் பாதுகாப்பாக விரைவில் உத்தரவு பிறப் பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-10)

(ஆ) அறந்தாங்கிப் பகுதியில் காலரா நோயால் ஏற்பட்டுள்ள பாதிப்பு—தொடர்ச்சி.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையை நான் எழுப்பியபோது சிலபேர் அங்கே இறந்து போயிருக்கிறார்கள் என்று எனக்குக் கிடைத்த தகவலைச் சொன்னேன். (குறுக்கீடு) முதல் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் எழுப்பிய பிரச்சினைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்ன பிறகு எதிர்க்கட்சித் துணைத்தலைவர் ஒத்துழைத்தால் மற்ற உறுப்பினர்கள் வேறு பிரச்சினைகளை எழுப்புவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த அவையில் ஒரு பிரச்சினை கிளப்பப் பட்டு, அது முடிவுற்று அதற்கு பிறகு வேறு ஒரு பிரச்சினைக்குப் போய் அதற்கு மாண்புமிகு முதல்வர் பதில் சொன்னதற்குப் பிறகு, 'ரெட்டி ஒச்சி, முதல் ஒச்சி' என்பது மாதிரி மறுபடியும் முதல் சப்ஜெட்டிற்கே போவது நியாயமல்ல, முறையல்ல. அதைத் தலைவர் அவர்கள் அனுமதிக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, அந்தப் பிரச்சினை முடிந்தவுடனே நான் எழுந்தேன். எதிர்க்கட்சியின் இன்னொரு முக்கிய தலைவர் ஒரு பிரச்சினையை எழுப்புகிறார், நீங்கள் உட்காருங்கள் என்று தாங்கள் சொன்னதால்தான் உட்